சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, அக்.17-

நாளை (18ஆம் தேதி) காரைக்குடியில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. இதுகுறித்து சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கேஆர்.பெரியகருப் பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

நாளை (18 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) சிவ கங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் காரைக் குடியில் நடை பெறுகிறது.

இதுகுறித்து அவர் விடுத் துள்ள அறிக்கையில் கூறி யுள்ளதாவது. நாளை காலை 10.மணி அளவில் காரைக்கு டியில் உள்ள தலைவர் கலை ஞர் பவளவிழா மாளிகை யில் பசும்பொன் தா.கிருட்டி ணன் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

நாளை 18ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் காரைக் குடியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான தலை வர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறு கிறது. இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள் ளது.

1.கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்துள்ள ஒன்றிய, நகர், பேரூர்க் கழக மறுசீரமைப்பு குறித்து விவா திக்க பட உள்ளது.

2.கழக வளர்ச்சி பணி கள். இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள் ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

தன்மானத் தலைவரின் மதிநுட்பமும் தற்குறிகளின் தடுமாற்றமும்

இடைத்தேர்தல் என்பதை விட "கூட்டணி எடைத்தேர்தல்" என்றே கூற வேண்டும். மழைக் காளானாய் முளைத்த கனவுக் கட்சிக்கு தாராபுரம் மதுராந்தகம் இடைத்தேர்தல்கள் பரி சோதனை களமாய் பார்க்கப்பட்டது. இதுவரை தமிழகம் சந்தித்திராத மின் வெட்டும் அரிவாள் வெட்டும் பாலியல் வன்கொடுமைகளும் பல சரக்கு விலை உயர்வும் மக்களை பெரும் அச் சத்துக்குள் ஆழ்த்தி இருந்த வேளை யில் நடைபெற்று முடிந்தது இடைத் தேர்தல்.

தாராபுரத்தில் தன்மானத் தலைவ ரின் ரோடு ஷோவை பார்க்க பொதுமக் கள் பொது அமைப்புகள் எனப் பலரும் காலையிலிருந்து சாலையின் இருபு றத்திலும் திரண்டு இருந்தது மக்கள் தலைவனை மதிக்கும் மாண்பை வெளிப்படுத்தியது. மூத்த தி.மு.க. கழ கப் பெருந்தொண்டர் தந்த மாலையை அக்கூட்ட நெரிசலிலும் வாங்கி மாலை யிட்டு மதிப்பளித்தது பார்ப்பவர் மனதை நெகிழச் செய்தது.

பொதுக்கூட்டமா? மாநாடா? என்று வியக்கும் வண்ணம் ஜம்பதாயிரத்திற் கும் மேற்பட்ட மக்கள் அணி திரண்டிருந்தனர். பொதுக்கூட்டத்திட லுக்கு வருகை புரிந்த இனமானத் தலைவரின் வண்டியும் வழியில் தி.மு.க. தொண்டர்களின் பெருங்கூட் டத்திற்கிடையே சிக்கிக் கொண்டது. தலைவரின் தலைசிறந்த தார்மீக உரையை அட்டைக்கத்தியால் அறுக்க முயன்றனர் தற்குறிகள்.

தி.மு.க. முதன்மைப் பிரச்சாரகரில் ஆசிரியர் வீரமணி, கவிஞர் கனி மொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., இளம் தலைவர் உதயநிதி, தே.மு.தி.க. பிரேமலதா விஜயகாந்த், ஜவஹி ருல்லா, தமிமுன் அன்சாரி போன்றோ ரின் பிரச்சாரக் களங்கள் மக்களை ஒரு திசை நோக்கிய வாக்குப்பயணத்தை உருவாக்கியது.

இஸ்லாமிய வாக்காளர்களை கவ ருவதற்காக களம் இறக்கப்பட்ட அமைச்சர்கள் ஷாஜகான், ஃபெரோஸ் ஆகியோருக்கு கிடைத்த அனுபவம் இஸ்லாமியர்கள் வாக்குகளால் மட்டு மல்ல வாய்மையாலும் தி.மு.க.வின் பக்கமே நிற்கின்றனர் என்பதை தேர்தல் முடிவுகள் அடித்துக் கூறின.

தி.மு.க. முன்னாள் அமைச்சர் பெரு மக்களின் வாக்குச் சேகரிப்பு முறைக ளும் கிராமங்களில் முகாமிட்டு மக்க ளோடு மக்களாக கலந்து பேசிய விதமும் தாராபுரம் வாக்காளர்களை புதிய அனுபவத்திற்கு ஆளாக்கியது.

தாராபுரம் தேர்தல் தேதி அறிவிக்கப் பட்டதில் இருந்து அமில சோதனைக்கு ஆளானார் த.வெ.க. வேட்பாளர். பல இடங்களிலும் விரட்டப்பட்டார். ஏமாந் தவர்களின் ஏவுகணை பேச்சால் எட் டுப்பட்டி போலீஸையும் அழைத்துக் கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார். விஜயின் சாலைப் பயணம் ந(ர)கர மக்களின் சோதனைப் பயணமானது.

தாராபுரம் கோவிந்தாபுரம் பகுதி யில் தேர்தல் நடப்பதற்கு இரண்டு நாட் களுக்கு முன்பாக தேர்தல் பறக்கும் படையால் 5 கோடி ரூபாய் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா மகனின் காரில் கைப்பற்றப்பட்டது (உளவுத் துறை செய்தி). ஆனால், முன்னாள் அ.தி.மு.க. (த.வெ.க.) செயலாளர் ஒரு வரிடம் ஒப்படைக்கப்பட்டது. தூய சக்தி யின் அவலட்சணம் இப்படியாக இருக்க மற்றொரு புறத்தில் மாண்பு மிகு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியது போல Panic Buying (தாறுமாறாக விலைக்கு வாங்குவது) தொடங்கியது. பிற கட்சி களைச் சேர்ந்தவர்களுக்கும் ஜாதி மதத் தலைவர்களுக்கும் 5 கோடி ரூபாய் வரை தேர்தல் பரிசாக வழங்கப்பட்டது.

கடைசி நேரத்தில் வெளியான விஜய் கட்சி வேட்பாளர் சத்தியபாமா வின் "ஏளனக் காணொளி" தேர்தலில் அதிர்வை ஏற்படுத்தியது. அதுவரை அவர்கள் போட்ட ஏமாற்று திட்டங்கள் தவிடுபொடியாகும்படியாக அமைந் தது.


"கேரவன் மைனர்" ஐ தாராபுரம் மக் கள் கொத்து பரோட்டா போட்டனர். 100 கிலோ மீட்டர் சுற்றி வந்து 50 கோடி ரூபாய் செலவு செய்தும் கிடைத்த பயன் தலைசுற்றி நின்றது தான்.

"தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல்" என்ற கூட்டணி கணக்கு களுக்கு இனி வேலை இல்லை என்ற புதிய தேர்தல் பாதையை உருவாக்கி யது இத்தேர்தல்.

வாக்குப்பதிவு முடிவுகள் இரண்டு உண்மைகளைப் பேசின. தபால் வாக் குகளில் 35 சதவீதம் கலந்த பொதுமக் களின் வாக்கு சீட்டு பதிவு முறையில் தி.மு.க.வின் வெற்றியை 47.15 சதவீ தம் என்ற ஆதாரத்தை அறிவித்தது.

ஒவ்வொரு சுற்றிலும் வாக்குப்பெட் டியின் மாயாஜாலம் நடந்து கொண்டே இருந்தது. ஆனால் 23 வது கடைசி சுற் றில் அம்பலமானது தேர்தல் கமிஷன் மண்டி. தி.மு.க. 39 சதவீதம் பெற்று முதலிடம் பெற்றும் த.வெ.க. 26 சத வீதம் பெற்று மூன்றாம் இடத்திலும் சந்தி சிரித்தது.

நரி பரியாகாது! தற்குறி ஒருபோதும் ஆச்சரியக்குறியாக முடியாது என்பதே இந்த இடைத்தேர்தல் சொல்லும் வலு வான உண்மை.



திராவிட மைந்தன்,
தாராபுரம்.

காலம் கடந்து நிலைத்து நிற்கும்

வீரத்தின் அடையாளம் கட்டபொம்மன் புகழ் ஓங்கட்டும்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலை தளப்பதிவு!

சென்னை, ஆக். 17-

வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளையொட்டி, நேற்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், "காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் வீரத்தின் அடையாளம் கட்டபொம் மன் புகழ் ஓங்கட்டும்!" என்று குறிப் பிட்டுள்ளார்.

அவரது வலை தளப்பதிவு வருமாறு:-

விடுதலைப் போரில் வீரத்தா லும் தியாகத்தாலும் தனக்கென தனி வரலாறு படைத்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள் இன்று.

தமிழ்நாட்டில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற சுயமரியாதைப் போராளி.



துளியும் சஞ்சலமின்றி தூக்குக் கயிற்றின் முன்பு கூட தீரத்தோடு நின்று உயிர் நீத்தவர்.

கட்டபொம்மன் நினைவைப் போற்றும் வகையில் அவரது கம்பீரச்சிலையை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைத்தது நம் திராவிட மாடல் அரசு!

திருமங்கலம் - கள்ளிக்குடி இடையே கட்டப்பட்ட மேம்பாலத் துக்கு 'கட்டபொம்மன்' மேம்பாலம் என்று பெயர் சூட்டினார் நம் தலை வர், மு.க.ஸ்டாலின் அவர்கள்.

காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் வீரத்தின் அடையாளம் கட்டபொம்மன் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

அமைச்சர்கள் வாக்களித்தபடி சட்டமன்றத்தில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்:

மதம் மாறியவர்களின் சமூகநீதிக்கான உரிமைகள் பறிக்கப்படக் கூடாது!

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, அக்.17-

மதம் மாறியவர்களின் சமூக நீதிக்கான உரிமைகள் பறிக்கப்படக் கூடாது! - அமைச் சர்கள் வாக்களித்தபடி சட்டமன் றத்தைக் கூட்டி சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சி யின் தலைவரும் நாகப்பட்டி னம் சட்டமன்ற உறுப்பினரு மான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மதம் மாறிய தன் காரணமாக, அவர் இதற்கு முன்பு அனுபவித்த சமூகப் பின் தங்கிய நிலையின் அடிப்படை யில் இடஒதுக்கீட்டுப் பயன்க ளைப் பெற முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று அளித் துள்ள தீர்ப்பு, தமிழகத்தின் சமூகநீதி வரலாற்றையும், அர சியல் சட்டத்தின் அடிப்படை களையும் புறக்கணிக்கும் வருத்தமளிக்கும் தீர்ப்பாகும்.

தமிழ்நாடு அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC), சீர்மரபினர் (DNC) மற்றும் பட்டியல் சமூகங் களைச் சேர்ந்தவர்கள் இஸ் லாத்திற்கு மதம் மாறிய பின் னர், உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் வகுப்பினருக்கான (BCM) சான்றிதழைப் பெற வழி வகுக்கும் அரசாணையை 2024 மார்ச் மாதம் வெளியிட் டது. இந்த அரசாணையைச் சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்த நிலையில், அதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு தாக் கல் செய்த மேல்முறையீட்டை உச்சநீதிமன்றம் தற்போது தள் ளுபடி செய்துள்ளது.

இஸ்லாமிய மார்க்கத்தை தங்களது வாழ்வில் நெறியாக ஏற்றுக்கொண்ட பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வகுப்புகளை சேர்ந்தவர் களுக்கு பி.சி.எம். இடஒதுக்கீடு வழங்கப்படாமல் அவர்கள் இதரர் என்று வகைப்படுத்தப் பட்டனர்.

கடந்த 22.4.2022, 11.3.2023 மற்றும் 14.2.2024 ஆகிய நாட்களில் சட்டமன்றப் பேரவையிலும், அதேபோல் கடந்த 22.9.2022 தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலா ளர் அவர்களை நேரில் சந்தித் தும் இஸ்லாமிய மார்க்கத்தை தழுவியர்களுக்கு பி.சி.எம். வகுப்பு சான்றிதழ் வழங்க வேண்டியதின் அவசியம் குறித்து மனிதநேய மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்தி னேன்.

இதனை தொடர்ந்து 15.2.2024 அன்று ஆளுநர் உரைக்கு பதிலளிக்கும் உரை யில் எனது கோரிக்கையை குறிப்பிட்டு அதற்கு பதிலளித்த அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டவல் லுனர்களுடன் கலந்து ஆலோ சித்து நான் வைத்துள்ள கோரிக்கை நிறைவேற்றப்படும் என பதிலளித்தார்கள்.

இந்த அறிவிப்பின் அடிப் படையில் கடந்த மார்ச் 9, 2024ல் அரசாணை வெளியி டப்பட்டது.

இந்த அரசாணையின் உத



வியால் தமிழ்நாட்டில் இஸ் லாத்தை ஏற்றுக்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான முஸ்லிம் களுக்கு பி.சி.எம். வகுப்பு சான் றிதழ் கிடைக்க மு.க.ஸ்டாலின் ஆட்சி வழிவகுத்தது.

மதம் மாறிய பிறகும் பிற்ப டுத்தப்பட்ட முஸ்லிம் (பிசிஎம்) என்ற உரிமை தொடரும் என்று இந்த அரசாணை தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த அக்டோபர் 25ல் தீர்ப்பு வழங்கிய நீதிபதியரசர்கள் எம். எஸ்.ரமேஷ் மற்றும் ஆர்.சக்தி வேல் அமர்வு (W.A.No.2813 of 2021), பிற்படுத்தப்பட்ட இந்து சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் இஸ்லாத்திற்கு மாறிய பிறகு பெற்ற பிசிஎம் சான்றிதழ் செல்லுபடியாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த தீர்ப்பில், பிசிஎம் அந்தஸ்து புதி யதாக வழங்கப்பட்டது அல்ல; ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சமூகநீதிசார் உரிமை என் பதை நீதிமன்றம் உறுதிப்படுத் தியுள்ளது. மேலும், "பிற்படுத் தப்பட்ட முஸ்லிம்" என்பது தமிழ்நாடு சட்டம் 45/1994ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமூ கப் பிரிவு என்பதை நீதிமன்றமே தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில், இஸ் லாத்தை தழுவியவர்களுக்கு 3.5% பிசிஎம் இடஒதுக்கீட்டை செல்லாது என சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் நீதியரசர்கள் ஜி.ஆர். சுவாமிநாதன் மற்றும் பி.பி. பாலாஜி கடந்த ஜூன் 25, 2026 அன்று தீர்ப்பு வழங்கி னார்கள்.

இந்த தீர்ப்பு தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு அளிக்கப்பட்டதாகும்.

இதனை தொடரந்து உச்சநீ திமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கில் தான் இன்று உச்சநீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக தொடர்ச்சி யாக இப்பிரச்னைக்கு தீர்வு 2007ல் பிற்படுத்தப்பட்ட முஸ் லிம்களுக்கு 3.5 இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தில் சிறிய திருத்தம் செய்யும் சட்டத்திருத் தம் சட்டமன்றத்தில் நிறைவேற் றப்பட வேண்டுமென்று சட்ட மன்றத்தில் நான் கோரிக்கை வைத்தேன்.

சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் சட்டத் துறை அமைச்சர் மற்றும் பொதுபணித்துறை அமைச்சரி டமும் நானும் பல்வேறு முஸ் லிம் அமைப்புகள் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்பின் சார்பாக நேரில் கோரிக்கை வைத்தோம். எத்தகைய திருத் தம் செய்யப்பட வேண்டு மென்ற வரைவு திருத்த சட்ட முன்வடிவும் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சமர்பிக்கப்பட்டது.

இருப்பினும் முஸ்லிம் சமூக தலைவர்களிடம் வாக்களித்த படி சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்துள்ள சூழலில் உட னடியாக சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டத்தை கூட்டி சட்டத் திருத்தம் நிறைவேற்றி சமூக நீதியை த.வெ.க. அரசு நிலை நாட்டப்பட்ட முன்வர வேண்டு மென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை யில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி

23 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



குமரி, அக். 17-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 23 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 23 வது வட்டக் கழகச் செய லாளர் என்.சுரேஷ் தலை மையில், நாகர்கோவில் மாந கர வடக்கு பகுதிச் செயலாளர் இ.ஜவகர் மற்றும் கன்னியா குமரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பா ளர் எம்.ஜே.ராஜன் ஆகி யோர் முன்னிலையில் 15.10.2026, வியாழக் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் சாந்தன் செட்டிவிளை, அருள்மிகு முத்தாரம்மன் கோவில் மண்டபத்தில் வைத்து நடை பெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தி னராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர் பாக நிர்வாகிகளுக்கு ஆலோ சனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கலை, இலக் கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஜெ.ராஜேஷ் குமார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் என்.கோலப்பன், கழக நிர் வாகிகள் வே.ரமேஷ் மார்க் கண்டன், எம்.பரம சிவன், லெட்சுமணன், எம்.நாகரெத் தினம், கே.ராணி, ரமேஷ், ஜெகதீஸ், சஜு, விபின் உட் பட பகுதி, வட்ட கழக நிர்வாகி கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற் றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தீர்மானம்: 1

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2

கழக பணியினை தொய் வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்ட ளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறை வேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர் மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெரு மக்களுக்கும் மாவட்ட தி.மு. கழகம் மற்றும் நாகர்கோ வில் மாநகர தெற்கு பகுதி கழ கம் சார்பாக நன்றி தெரிவிக் கப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ். இராகவானந்தம்

அக்டோபர் 17 (1999)



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.